தமிழ் நாடு சட்ட மன்றம்

—

வெள்ளிக்கிழமை, 1973 மார்ச் 30.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்ற மண்டபத்தில் பிற்பகல் 4 மணி அளவில் மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் (திரு. சி. பி. சிற்றரசு) அவர்கள் தலைமையில் சட்டமன்றம் கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிடப்பட்ட வினாக்கள்.

Dacoity in the P.W.D. Offices at Chepauk, Madras

* 301 வி.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether there was any dacoity in the Public Works Department Offices at Chepauk, Madras, about April 1972;

(*b*) if so, the details thereof; and

(*c*) the action taken thereon?

சென்னை, சேப்பாக்கத்திலுள்ள பொதுப்பணித் துறை அலுவலகத்தில் திருட்டு.

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1972-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் அளவில் சென்னை சேப்பாக்கத்திலுள்ள பொதுப்பணித் துறை அலுவலகத்தில் திருட்டு ஏதும் நடந்ததா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

(உ) அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) 20—4—1972-ஆம் நாள் இரவு, சேப்பாக்கத்தில் உள்ள பொதுப்பணித் துறை அலுவலக வளவுகளில் சேமித்து வைக்கப்பட்டிருந்த சுமார் 4,000 ரூபாய் மதிப்புள்ள இரும்புக் கம்பிகள் திருடப்பட்டன.

(உ) குற்றம் புரிந்தவர்கள் காவலரால் கைது செய்யப்பட்டு 5-வது மாநகர மாஜிஸ்டிரேட் முன்னால் குற்றம் சாட்டப்பட்டனர். களவுபோன பொருள்கள் மீட்கப்பட்டன. வழக்கு விசாரணையில் உள்ளது. உடைமைகளைப் பாதுகாப்பதற்குப் போதுமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இரவு நேரங்களில் பொருள்களைக் காப்பதற்குக் காவல்காரர்கள் இரண்டு பேர் நியமிக்கப்பட்டுள்ளனர். பகல் நேரங்களிலும் பொருள்களைக் காவல்காரர் ஒருவர் பார்த்துக்கொள்கிறார்.

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி: தலைவர் அவர்களே, திருடப்பட்டு எடுத்துச் சென்ற பொருள்களின் விலை மதிப்பு எவ்வளவு? ரூ. 4,000 மதிப்புள்ள பொருள்களும் திருடப்பட்டுச் சென்றனவா என்று அறிய விரும்புகிறேன். இத்தகைய முக்கியமான இடங்களில் திருட்டு நடந்திருக்கிறது. எப்படி நடக்க முடிந்தது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ரூ. 4,000 மதிப்புள்ள இரும்புக் கம்பிகள் திருடப்பட்டன என்று முதல் கேள்விக்கு அளித்த பதிலில் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறேன். அந்தப் பகுதியில் சிலர் லாரியில் ஏறிக்கொண்டு இரவு சுமார் 1 மணி அளவில் வந்திருக்கிறார்கள். அங்கு சார்ஜண்டுகள் 2 பேர் பணி புரிந்துகொண்டிருந்தார்கள். அவர்கள் முன்னால் சேமித்து வைக்கப்பட்டிருந்த இரும்புக் கம்பிகளை அகற்றும்பொழுது, அதைத் தடுத்துக் கேட்ட நேரத்தில் கத்தியைக் காட்டி பயமுறுத்தி, தூண் ஒன்றில் அங்கிருந்த காவலரைக் கட்டி வைத்துவிட்டு, லாரியில் கம்பிகளை ஏற்றினார்கள். அவர்கள் அந்த இடத்தைவிட்டு அகலும்பொழுது தான் அவர்களை அவிழ்த்துவிட்டிருக்கிறார்கள். அதற்குப் பிறகு போலீசாருக்கு விவரம் சொல்லி, அதன் அடிப்படையில் குற்றவாளிகள் 13 பேர் கைது செய்யப்பட்டார்கள்.

திரு. கே. ராஜாராம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, திருட்டு பலவகைப்படும். அதிகாலையில் 6 மணியிலிருந்து 7½, 8 மணிக்குள், மத்தியானம் பட்டப்பகலில் 1 முதல் 3 மணிக்குள், கவர்மெண்டு எஸ்டேட்டிலும், சேப்பாக்கத்தில் பழைய ரெவின்யூ போர்டு ஆபீஸ்களின் பக்கத்திலும் இருக்கும் மரங்களில் உள்ள தழைகளை ஏராளமாக வெட்டி வண்டி வண்டியாகக் கொண்டு போகிறார்கள். திருட்டில் இது முதல்தரமான திருட்டு. இதை நிறுத்துவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா? நான் நேரடியாகப் பார்க்கிறேன். தடுத்தால் சண்டை வந்துவிடும்போல் இருக்கிறது. தினசரி காலை

1973 மார்ச் 30]

யிலும் மத்தியானம் பட்டப்பகலிலும் கவர்மெண்டு எஸ்டேட்டிலும், பழைய ரெவின்யூ போர்டு ஆபீசுகளிலும் உள்ள மரங்களிலிருந்து பச்சை இலே கிளேகளே வெட்டிக் கொண்டு போகிருர்கள். இதுவும் இரும்புக் கம்பிகள் திருட்டு போல தான். இதை நிறுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணுநிதி: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலேவர் அவர்கள் இந்தத் திருட்டை பல நாட்கள் பார்த்துக் கொண்டிருந்தும், கேள்வி வருகிற நேரத்தைப் பயன்படுத்திக் கொண்டு சொல்லுவதற்குப் பதிலாக ஏற்கெனவே என்னிடத்தில் தெரிவித்திருந்தால், அப்படிப்பட்ட விஷயத்தைக் கவனித்திருப்பேன். முன்பே கவனித்திருக்கலாம். பல கிளேகளேக் காப்பாற்றியிருக்கலாம்.

Transfer of Sub-Collector, Kumbakonam

*302 Q.—THIRU G. SWAMINATHAN: Will the Hon. Chief Minister be pleased to state—

(a) whether it is a fact that a resolution was passed at the Tamil Nadu Village Officers Association, Kumbakonam Revenue Division, on 30th August 1972 requesting the Government to transfer the Sub-Collector, Kumbakonam;

(b) if so, the reason for such a resolution; and

(c) the action proposed to be taken by the Government in the matter?

கும்பகோணம், மாவட்டத் துணை ஆட்சியாளரை மாற்றுதல்

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட விளுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கும்பகோணம், மாவட்டத் துணை ஆட்சியாளரை மாற்றுமாறு அரசைக் கோரி, 30—8—1972 ஆம் நாள், கும்பகோணம் வருவாய்க் கோட்டம், தமிழ் நாடு கிராம அதிகாரி கள் சங்கம், தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியது உண்மையா?

(இ) ஆமெனில், அத்தகைய தீர்மானத்தை நிறைவேற்றியதற் கான காரணம் யாது?

(உ) இது குறித்து அரசு எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கை யாது?